செ.வெ.எண்:16 நாள் : 06.03.2021

**சட்டமன்ற பொது தேர்தல் - 2021**
**கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு தேர்தல் நடத்தும் அலுலவர்களிடம் மின்னணு வாக்கு பதிவு இயந்திங்கள் வழங்கும் பணிகள் துவக்கம்.**
**மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தகவல்**

---

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு பெட்டக அறை, வருவாய் கோட்டாட்சியர்(கிருஷ்ணகிரி) அலுவலகம் மற்றும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகிய இடங்களில் வைக்கப்பட்டிருந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களை சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்யப்பட்டதை 6 சட்டமன்ற தொகுதிகளுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிதிகள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் வழங்கும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

**மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித்தலைவர்**
**டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்ததாவது :-**

சட்டமன்ற பொது தேர்தல் 2021 நடைபெறுவதையொட்டி கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச் சாவடிகளில் வாக்குப்பதிவிற்கு பயன்படுத்தப்படவுள்ள வாக்குப்பதிவு இயந்திரங்களை (EVM & VVPAT) பகிர்ந்தளிப்பதற்காக அனைத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சி பிரதிநிகள் முன்பாக இந்திய தேர்தல் ஆணையத்தின் இணையதளத்தின் மூலம் சுழற்சி முறை (Randomization)-யினை பயன்படுத்தி(05.03.2021) அன்று மாவட்ட ஆட்சியர் அலவலக கூட்டரங்கில் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

அதன்படி, 51-ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 345 வாக்குப்பதிவு மையங்களுக்கு 408 BALLOT UNIT , 408 CONTROL UNIT மற்றும் 442 VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள், 52-பர்கூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 352 வாக்குப்பதிவு மையங்களுக்கு 416 BALLOT UNIT , 416 CONTROL UNIT மற்றும் 451 VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள், 53-கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 377 வாக்குப்பதிவு மையங்களுக்கு 445 BALLOT UNIT , 445 CONTROL UNIT மற்றும் 483 VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள், 54-வேப்பனஹள்ளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 373 வாக்குப்பதிவு மையங்களுக்கு 441 BALLOT UNIT, 441 CONTROL UNIT மற்றும் 478 VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள், 55-ஓசூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 503 வாக்குப்பதிவு மையங்களுக்கு 594 BALLOT UNIT , 594 CONTROL UNIT மற்றும் 644

VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள், 56-தளி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட 348 வாக்குப்பதிவு மையங்களுக்கு 411 BALLOT UNIT , 411 CONTROL UNIT மற்றும் 446 VVPAT வாக்குப்பதிவு இயந்திரங்கள் என மொத்தம் 2298 வாக்குப்பதிவு மையங்களுக்கு 2715 BALLOT UNIT , 2715 CONTROL UNIT மற்றும் 2944 VVPAT மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டது.

தொடர்ந்து, இன்று (06.03.2021) மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள பாதுகாப்பு பெட்டக அறை, கிருஷ்ணகிரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் ஆகிய இடங்களில் உள்ள மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களான Ballot Unit, Control Unit மற்றும் VVPAT ஆகிய இயந்திரங்களுக்கு ஒதுக்கப்பட்ட எண்களை சரிபார்த்து சுழற்சி முறையில் (Randomization) ஒதுக்கீடு செய்யப்பட்ட எண்களுக்கான மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்கள் அந்தந்த சட்டமன்ற தொகுதிகளுக்கு அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரிதிநிதிகள் முன்னிலையில் தேர்தல் நடத்தும் அலுவலர்களிடம் வழங்கப்படும் என மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் தெரிவித்தார்.

முன்னதாக, கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் வி.ஜெயசந்திர பானுரெட்டி இஆப., அவர்கள் புதிய பேருந்து நிலையத்தில் மின்னணு வாக்கு இயந்திரத்தை வாக்காளர்கள் வாக்களிப்பது குறித்த விழிப்புணர்வு பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வுகளில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரெ.சதீஸ், சிறப்பு மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ரத்தினசாமி(EVM), அனைத்து தேர்தல் நடத்தும் அலுவலர்கள், உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள், அனைத்து அங்கீகரிக்கப்பட்ட கட்சி பிரிதிநிதிகள் மற்றும் முகவர்கள் உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொர்டர்பு அலுவலர், கிருஷ்ணகிரி.